# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

| O. S. No. 45/2012 | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரராஜ் | Religion: | இந்து |
| Father's Name: | பெருமாள் | Caste: | |
| Village: | கத்தேரி | Calling: | விவசாயம் |
| Taluk: | சங்ககிரி | Age: | 31 |

Date: 2.12.2019 – PW-1

வாதிகள் தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கில் 2 ஆம் வாதி என்னுடைய அப்பா என்றால் ஆமாம். அவர் நல்ல ஆரோக்கியமான நிலையில் நடை உடையுடன் இருக்கிறார் என்றால் ஆமாம். அவர்தான் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக விவரங்களை வழக்கறிஞரிடம் சொன்னார் என்றால் ஆமாம். எனக்கு தற்போது வயது 30 என்றால் 31. என்னடைய அப்பா நல்ல உடல்நிலையில் இருப்பதால் நான் சாட்சி சொல்வதற்கு என்ன காரணம் என்றால் கொஞ்சம் தடுமாற்றமாக உள்ளார். தாவா சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 10 ஏக்கர் 87 செண்ட். நான் சொல்வது தவறு என்றாலும் ச.எண். 429 மொத்த விஸ்தீரணம் 11 ஏக்கர் 62 செண்ட் என்றால் ஆமாம். சிறிது நிலம் ரோட்டிற்கு எடுத்துக் கொண்டார்கள். மீதி அனுபவத்தில் உள்ள 10 ஏக்கர் 62 செண்ட்தான். என்னுடைய அப்பா வழக்கு தாக்கல் செய்தது ச.எண்.429 ல் உள்ள முழுக்காலைக்கும்தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். சொத்தில் பெருமாள்கவுண்டர், செங்கோடக்கவுண்டருக்கு எப்படி பாத்தியம் என்றால் தெரியாது. பெருமாள் கவுண்டர், செங்கோடகவுண்டர் ஆகியோரின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மாராயிக்கு தாவா சொத்தில் 6 ல் 2 பங்கு என சொல்லியுள்ளேன். அவருக்கு எப்படி பாத்தியம் என்பது தெரியாது என்றால் ஆமாம். எந்தெந்த ச.எண்.429 என்னென்ன உட்பிரிவில் எவ்வளவு விஸ்தீரணம் 1 ஆம் வாதி அனுபவித்து வருகிறார் என்பது தெரியாது என்றால் ஆமாம். உயில் மூலம் அவருக்கு எவ்வளவு சொத்து வந்தது என்றால் 3 1/2 ஏக்கர் வந்தது. உயில் மூலம் மாராயி 1 ஆம் வாதிக்கு 4 ஏக்கர் 44 செண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் அது தெரியவில்லை. பெருமாள் கவுண்டரும், செங்கோடகவுண்டரும் சகோதரர்கள் என சொல்லியுள்ளது தவறானது என்றால் சரிதான். செங்கோட கவுண்டர் பெருமாள் கவுண்டரின் அப்பா. பெருமாள்கவுண்டரும், ஒரு பழனி கவுண்டர் என்பவரும்தான் சகோதரர்கள் என்றால் சரிதான். பழனிக்கவுண்டருக்கு எத்தனை பையன்கள் என்றால் இரண்டு பையன்கள். பழனியப்பன் மற்றும் பழனிவேல் கவுண்டர் என்றால் ஆமாம். அந்த பழனிவேல்கவுண்டருக்கு பழனியப்பன் வாரிசு என்றால் ஆமாம். மேற்படி

பழனியப்பனுக்கு என்னுடைய அப்பாவும், பெருமாயி என்பவரும் வாரிசு என்றால் ஆமாம். எனக்கு சொத்து எப்படி பாத்தியம் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். எதை வைத்து உரிமை கேட்கிறேன் என்றால் கிணற்றில் உள்ள விகிதாச்சாரத்தை வைத்து சொத்தில் பங்கு கேட்கிறேன். எத்தனை கிணறு உள்ளது என்றால் நான்கு உள்ளது. அதன் மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு கிணற்றில் ஆயில் எஞ்சின் மோட்டார் உள்ளது. ஒரு கிணற்றில் மின் இணைப்பு மோட்டார் உள்ளது. மற்றொரு கிணறு பயன்பாடு இல்லாமல் உள்ளது. தண்ணீர் இல்லாமல் வறண்டு உள்ளது என்றால் இல்லை. மழை வந்து தண்ணீர் உள்ளது. ஆனால் பயன்படுத்தப்படாமல் உள்ளது. அதில் இருந்து தண்ணீரை எடுத்து விவசாயம் செய்யவில்லை என்றால் ஆமாம். 2, 4, 5 பிரதிவாதிகள் 6 ஆம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால், 429 தான். அதன் உட்பிரிவு தெரியுமா என்றால் தெரியாது. எவ்வளவு கிரயம் கொடுத்தார்கள் என்றால் 1/2 ஏக்கர் கொடுத்தார்கள். அந்த சொத்தில் முத்துசாமிதான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் இல்லை. 1 ஆம் வாதிதான் அனுபவித்து வருகிறார். மாராயி 1 ஆம் வாதிக்கு உயில் மூலம் எழுதி வைத்த சொத்தைத்தான் 1 ஆம் வாதி அனுபவித்து வருகிறார் என்றால் ஆமாம். அந்த உயிலில் ச.எண்.429/10 எப் வரவில்லை என்றால் அவர்தான் குடியிருக்கிறார். ச.எண்.429/10 எப்- ஆனது 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அதைத்தான் 6 ஆம் பிரதிவாதிக்கு கியரம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றாலும், தற்போது 6 ஆம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இடையூறு செய்து 1 ஆம் பிரதிவாதிதான் வீடு கட்ட முயற்சித்து வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் என்ன எதிர்வாதம் செய்துள்ளார்கள் என்பது தெரியுமா என்றால் தெரியாது. ச.எண்.429 ல் என்னென்ன உட்பிரிவில் அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்பது தெரியுமா என்றால் ஆவணங்களை எடுத்துப் பார்த்தால்தான் தெரியும். எங்கள் அனுபவத்தில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 1 ஏக்கர் 80 செண்ட். உட்பிரிவு தெரியுமா என்றால் தெரியாது. 1 ஆம் பிரதிவாதி எந்த சர்வே எண்ணில் எவ்வளவு விஸ்தீரணம் அனுபவித்து வருகிறார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களுக்கு ஆவணங்கள் இல்லை என சொல்லியுள்ளது தவறானது என்றாலும், 3 ஆவணங்கள்படி 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா செதாத்தில் 5 ஏக்கர் 43 செண்ட் பாத்தியம் என்றாலும், அதை 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்படும் பட்சத்தில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். அவர்களுக்கான பாகத்தை ஒதுக்குவதற்கான நீதிமன்றக் கட்டணமும் செலுத்தியுள்ளார்கள் என்றால் அது தெரியாது. தாவா சொத்தில் கிணற்றில் உள்ள பங்கை வைத்துக் கொண்டு பாகம் கோரியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கிணறானது நீண்ட நெடுங்காலமாக பயன்பாட்டிலேயே இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் 3 கூரை வீடுகளும், ஒரு அட்டை வீடும் உள்ளது. எந்த உட்பிரிவில் உள்ளது என்பது தெரியாது என்றால் ஆமாம். வீட்டின் நீள, அகலம் சொத்து விவரத்தில் சொல்லவில்லை என்றாலும், எந்த பிரிவில் உள்ளது என்றும் சொல்லவில்லை என்றாலும் ஆமாம். ஒருவேளை முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தாலும் அதனை நிறைவேற்ற முடியாது என்றால் சரியல்ல. 2ஆம் வாதி என்னுடைய தகப்பனார் என்ற காரணத்தால் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சொத்து மதிப்பு ஏக்கருக்கு எவ்வளவு இருக்கும் என்றால் மொத்தமாக 12 லட்சம் இருக்கும். ஒரு ஏக்கர் 1 முதல் 1 1/4 லட்சம் இருக்கும். அரசு வழிகாட்டுதலின் மதிப்பை வரவழைக்க ஆட்சேபனை ஏதாவது உள்ளதா என்றால் அதில் எவ்வளவு உள்ளது என்று தெரியாது. 1 முதல் 5 பிரதிவாதிகள் எந்த தேதி, எந்த வருடம் தொந்தரவு செய்தார்கள் என்பது தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.
மறு விசாரணை - இல்லை.

Sd/- Sundararaj

**Sd/- M. Mekala Mythili,**
**Subordinate Judge,**
**Sankari.**